1981 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : நெடுஞ்சாலை பழுதுபட்டிருக்க வில்லை. இருந்த போதிலும், தற்பொழுது உள்ள வாகனப்போக்கு வரத்திற்கு ஏற்றபடி மேம்படுத்தப்பட்டு வருகிறது.

பொட்டிப்புரம் பகுதியிலுள்ள கட்டபொம்மன் கண்மாயினைச் சீர்படுத்தும் திட்டம்.

*வினா எண் 642—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடி பொட்டிப்புரம் பகுதியில் கட்டபொம்மன் கண்மாய் சீர்படுத்த நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அந்தப் பணி எப்போது துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1979ஆம் ஆண்டு இறுதியில் முடிக்கப் பெற்றுள்ளது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தக் கண்மாயை வெட்டுவதற்கு அங்குள்ள விவசாயிகளிடமிருந்து நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதாகவும் அதற்கு இன்னும் பணம் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்றும் புகார் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் உடனடியாக அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்புதான் இருக்கிறது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு இன்னும் நஷ்டஈட்டுத் தொகை கொடுக்கவில்லை என்ற குறிப்பு இல்லை. ஆனாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த கட்டபொம்மன் கண்மாய் அந்தக் காலத்தில் கட்டபொம்மன் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஒளிந்து இருந்த போது அவரும் இந்தக் கண்மாய் கட்ட உதவி செய்தார் என்பதால்தான் அந்தக் கண்மாய்க்கு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த கட்டபொம்மன் கண்மயை மீண்டும் தூர் எடுத்து, இன்னும் பல ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, உரிமைக்குப் போராடிய, மானமே பெரிது என்று நினைத்த கட்ட பொம்மன் பெயரிலே இந்தக் கண்மாய் இருப்பது கண்டு உள்ள படியே மகிழ்ச்சியடைகிறோம். அதே நேரத்தில் இந்தக் கண் மாயின் பரப்பளவு 27 ஏக்கர், இதனால் பாசனம்பெறும் பரப்பு 68 ஏக்கர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எலத்தூர் தொழுநோய் மருத்துவமனை.

*வினா எண் 605—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் வட்டம் எலத்தூர் தொழுநோய் மருத்துவமனையை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) தற்போது உள்ள படுக்கைகள் எவ்வளவு?

(இ) மருத்துவர்கள் எத்தனை பேர் ?

(ஈ) சிகிச்சை பெறும் வெளி உள் நோயாளிகள் எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) தற்போது கட்டுப்பாடு நிலையத்தில் படுக்கைவசதி கள் ஏதும் இல்லை.

(இ) ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிகின்றார்.

(ஈ) தற்போது சிகிச்சைப்பெறும் வெளிப்புற நோயாளிகளின் களின் எண்ணிக்கை : 6,082.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஏற் கெனவே அந்த எலத்தூரில் இருக்கிற தொழுநோய் சென்டரைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஏற் கெனவே அந்த ஆஸ்பத்திரியை கட்டும்போது படுக்கை வசதி செய்யப்பட்டிருந்தது. பிறகு, போதிய கட்டிட வசதி இல்லை என்று சொல்லி, டி.எம்.ஓ. அங்கிருந்த படுக்கைகளை பல்வேறு ஆஸ்பத்திரிகளுக்கு கொடுத்துவிட்டார். இப்போது அமைச்சர் அவர்கள் கட்டிடம் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். கட்டிடம் கட்டிய பிறகு, அரசாங்கம் அங்கே படுக்கை வசதி செய்துதருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி லெப்ரசி கன்ட்ரோல் யூனிட் பற்றியதாகும். ஒவ்வொரு ஆண்டும் அந்த இடத்திற்கு வந்து நோயாளிகள் தங்